திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, அவர்கள் ப்ரொமோஷன் விஷயத்தில் சர்க்கார் மிகவும் மெதுவாக இருக்கிறது. நர்சாக வந்தவர்கள் நர்சாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மேலே இருக்கிறவர்களுக்குத்தான் அதிகமாக ப்ரொமோஷன் கிடைக்கிறதே தவிர கீழே இருக்கிறவர்களுக்கு ப்ரொமோஷன் கிடைப்பதில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மேலே இருக்கிறவர்களுக்கு ப்ரொமோஷன் கிடைக்கிறது, கீழே இருக்கிறவர்களுக்கு ஏன் ப்ரொமோஷன் கிடைக்கவில்லையென்றால், 'ஸீனியாரிட்டி பை சர்வீஸ்' என்ற அடிப்படையில் மேலே இருக்கிறவர்களுக்குத்தான் ப்ரொமோஷன் வரும். அதிலே ஒன்றும் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை.

திரு. என். மருதாசலம் : சுப்ரீம் கோர்ட் சர்வீஸ் உள்ளவர்களுக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களைக் கூப்பிடவே இல்லையே.

Primary Health Centre at Tholyavetty

*646 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to provide a second Primary Health Centre at Tholyavetty in Killiyoor Panchayat Union area?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இருக்கின்ற ப்ரைமரி ஹெல்த் சென்டரை அப்-க்ரேட் செய்து, முப்பது படுக்கைகள் உள்ள ரூரல் ஆஸ்பத்திரியாக உயர்த்தும் திட்டம் இருந்து, அதற்கான ப்ரொபோசல் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் ஆபீசில் வந்து, அதற்கான ரெகமென்டேஷன் செய்து அனுப்பியிருந்தோம். கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் கடற்கரையோரத்தில் ஒரு டிஸ்பென்சரி ஏற்படுத்துவதாக கன்யாகுமரி மாவட்ட ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசர் கூறினர். அதையும் நடைமுறையில் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முதலில் கேட்ட கேள்வி— ப்ரைமரி ஹெல்த் சென்டரை முப்பது படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக உயர்த்த முடியுமா என்பது. அந்தத் திட்டம் இருந்தது. ஏறத்தாழ 80, 90 ஆரம்ப சுகாதார நிலையங்கள்

1975 ஏப்ரல் 11]

துவக்கப்பட வேண்டுமென்ற கருத்து மத்திய அரசின் ஆலோசனை யில் இருந்தது. ஆனால், மத்திய அரசு அந்தத் திட்டத்தை அடியோடு கைவிட்டுவிட்டு, உயர்த்துவதற்குப் பணம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது அப்படி ஒரு திட்டம் வர வாய்ப்பு இல்லை. அடுத்து, டிஸ்பென்சரி ஏற்படுத்துவது என்றால், அது ஒன்றியத்தின் மூலமாக நடைபெறவேண்டும். அது ஆர்.டி.ஓ. மூலமாக வந்து ஒப்பம் அளிக்கப்படவேண்டும். தனியாக எழுதி அனுப்பினால், ரூரல் டெவலப்மென்ட் துறையும் மருத்துவத் துறையும் ஆலோசித்து அதற்கு அனுமதி அளிக்கக் கூடிய வாய்ப்பு வட்டாரத்தில் வருமானால் ஒத்துக்கொள்வார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கிள்ளியூர் ஒன்றியத்தின் ஹெட்குவார்ட்டர்ஸ் தொலையாவெட்டை என்ற பகுதியில் அமைந்திருக்கிறது. இந்த ஒன்றியம் மக்கள் அதிகமாக வாழும் பகுதி. ஆகவே, தொலையாவெட்டை பகுதியில் புதிய மருத்துவ மனையையோ அல்லது கூடுதல் டிஸ்பென்சரியையோ ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போது தொலையாவெட்டையில்தான் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. (Health Centre at Tholyavetty in Killiyoor Panchayat Union) என்றுதான் எழுதியிருக்கிறது. அங்கு இருப்பதாகத்தான் கேள்விக்குப் பதில் இருக்கிறது. தொலையாவெட்டையில் இல்லை யென்று சொன்னால் என்ன செய்யலாம் என்று தனியாகப் பரிசீலிக் கலாம்.

கும்பகோணம்-சீர்காழி சாலை

* 647 வினா.— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மாயூரம் நகரில் உள்ள கும்பகோணம்-சீர்காழி நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

Causeway near Sulagiri

*648 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon, the Minister for Public Works be pleased to state whether the work relating to the construction of the causeway over the jungle stream near Sulagiri in Hosur taluk has been completed?

---

*455—ம் பக்கத்தில் மாண்புமிகு அமைச்சர் இவ்விடையைத் திருத்தி அளித்த அறிக்கையைக் காண்க.